கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ம் நாள், புதன்கிழமை
இடைநிலை மனு எண். 4 /2025
இன்
அசல் வழக்கு எண்.259/2016
* * * *

நாஷர் உசேன் ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

/ எதிரிடை /

1. மாரியம்மாள்
2. மும்தாஜ் ... 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 வாதிகள்
3. மாங்கனி
4. மலர்
5. வினோத்குமார்
6. சுந்தரம்
7. மதியா
8. அமுதா
9. மண ரோஜா
10. பூச்சரம்
11. அனுசியா ... 3 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/
2 முதல் 10 பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனுவானது 19.11.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கிருபா விஜய் ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 1, 2எதிர்மனுதாரர்கள்/1, 2வாதிகள் தரப்பில் திரு.M.செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கையினை நீக்கரவு செய்தும், மேற்படி தாவா இடத்தினை அதே நீதிமன்ற ஆணையர் அவர் மூலமோ அல்லது வேறு ஒரு நீதிமன்ற ஆணையர் மூலமோ சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரியின் உதவியுடன் அளவீடு செய்ய வேண்டும் என்று கட்டளை 26 விதி 10(3)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்.**

1.1) மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு மனுவில், அசல் வழக்கில் ஏற்கனவே I.A.No.364/2020ல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட

ஆணையர் அறிக்கையினை நீக்கரவு செய்தும், மீண்டும் புதிய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து, நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி உதவியுடன் தாவா சொத்தினை பார்வையிட்டு தாவா 1வது இலக்க சொத்தினை அளந்து அதன் சரியான சர்வே எண்ணை கண்டறிந்து ஒரு அறிக்கையினை தாக்கல் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2) தீர்வு:–**

2.1) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவாச் சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் தொடர்ச்சியாக எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், கள்ளிக்குடி சார்பதிவகத்தில் ஆவண எண்.293/2014மூலம் எழுதி பதிவு செய்துக் கொடுத்த கிரைய ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்ற விளம்புகை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) இந்நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில், 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 வாதியின் 1வது இலக்கத்தில் பிராதில் கூறியுள்ள நான்குமால்கள் படி சர்வே எண்.10/1B3 என்பது தவறு என்றும், பிராது 1வது தபசில் கூறியுள்ள நான்குமால்படி 1வது தபசில் சர்வே எண்.10/16 என்றும், தனது பத்திரத்தில் உள்ள நான்குமால்களின்படி உள்ள சொத்துதான் சர்வே எண்.10/1B3 என்றும், தாவா மனு மற்றும் மனுதாரருக்கு அளித்த வாரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள நான்குமால் UDR க்கு முன்பு இருந்த நான்குமால் என்றும், எனவே UDR க்கு முன்பாக FMB வரைபடம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பதிவு அறையில் சென்றுதான் பார்வையிட்டு அதை வைத்து தான் அளவீடு செய்ய முடியும் என்றும், அதனை திருத்தம் செய்தால் மட்டுமே மேற்படி சொத்துக்களை அளவீடு செய்ய முடியும் என்று சர்வேயர் குறிப்பிட்டார் என்றும், இதற்கு எதிர்மனுதாரர்/வாதிகள் தரப்பில் யாதொரு ஆட்சேபணையும் இல்லை என கூறிவிட்டு அதனடிப்படையில் இடைக்கால அறிக்கை ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டது என்றும், எனவே I.A.No.364/2020ல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கையினை நீக்கரவு செய்தும், மீண்டும் புதிய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து, நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி உதவியுடன் தாவா சொத்தினை பார்வையிட்டு தாவா 1வது

இலக்க சொத்தினை அளந்து அதன் சரியான சர்வே எண்ணை கண்டறிந்து ஒரு அறிக்கையினை தாக்கல் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.3) இம்மனுவினை அனுமதிப்பதால், மேற்படி அசல் வழக்கு விசாரணைக்கு அது உரிய நடவடிக்கையாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதினால் இருதரப்பில் எவ்வித பாதகமும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்தில்கொண்டும், மேற்படி I.A.No.364/2020ல் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையினை நீக்கரவு செய்து, புதிய நீதிமன்ற ஆணையரை நியமிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. மேற்படி வழக்கு சொத்தினை அளவீடு செய்ய கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கலைச்செல்வி என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். மேற்படி நீதிமன்ற ஆணையரின் கட்டணமாக ரூ.8,000/− நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையருக்கான கட்டணத்தை இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் நீதிமன்ற ஆணையர் வசம் நேரடியாக வழங்க வேண்டும் என்றும், மேற்படி, நீதிமன்ற ஆணையர்

வழக்குச்சொத்தினை சம்பந்தப்பட்ட நில அளவையர் மூலம் கிராம நிர்வாக அதிகாரியின் துணைக்கொண்டு சட்ட விதிகளுக்கு உட்பட்டு இருதரப்பில் வழங்கும் ஆவணங்களின் அடிப்படையிலும் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தினை தாக்கல் செய்ய திரும்ப அழைக்க நாள்: 28.11.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.19 16:52:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு:–**

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை
2. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.19 16:52:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 4 /2025
இன்
அசல் வழக்கு எண்.259/2016
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்:19.11.2025